**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.9/2020** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 10** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | டாக்டர்.சரவணன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **06.03.2026**

**5, 12 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.12.2014 ம் தேதி அதே மருத்துவமனையில் நான் பணியில் இருந்த போது பெரம்பலூர் மதுவிலக்கு அமலாக்கபிரிவு ஆய்வாளர் குற்ற எண்.830/2014 வழக்கில் சம்மந்தப்பட்ட மாதிரியை ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி பெற்ற அறிக்கையை என்னிடம் கொடுத்து கருத்து கேட்டதின் பேரில் மேற்படி அறிக்கையை பார்வையிட்டு எவரேனும் 0.64மி.கி. சதவீதம் அல்லது அதற்கு மேல் அளவுள்ள அட்ரோபின் கலந்த திரவத்தினை உட்கொண்டால் அவருக்கு தலைவலி, நாக்கு உளர்தல், கண்கள் இருண்டு தோல் உலர்ந்து போதல், காய்ச்சல் மற்றும் வாந்தி, மயக்கநிலை,சிறுநீர் தடைபடுதல், கடுமையான வலிப்பு, சுவாசிக்க சிரமப்படுதல் மற்றும், சுவாச இழப்பு போன்றவை ஏற்படும் என்றும் முடிவில் கோமா ஏற்பட்டு மரணம் ஏற்படும் எனவும் கருத்து தெரிவித்து நான் சான்று வழங்கினேன். நான் பார்வையிட்டு ரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் 1.0மி.கி சதவீதம் அட்ரோபின்

இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த போலி மதுபானத்தை உட்கொண்டவருக்கு தீவிர சிகிச்சை அளிக்காவிட்டால் அது மரணத்தை ஏற்படுத்தும் என்று கருத்து தெரிவித்தேன். இதுசம்மந்தமாக நான் வழங்கிய சான்று அ.சா.ஆ.26, ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2014ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கள்ளசாராயம் அருந்தியதால் நான் முதல்விசாரணையில் சொன்ன அறிகுறிகளுடன் நான் பணியில் இருந்தபோது யாரும் சிகிச்சைக்கு வரவில்லை. தவறான பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கருத்து தெரிவித்து சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.